இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே!

12.05.2013 அன்று திருக்கல்யாணத் தாய் ஆலயம் திருத்தலமாக நமது மறைமாவட்ட ஆயர் மேதகு இவோன் அம்புரோஸ் அவர்களால் அறிவிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை எண்ணி மனம் பூரிப்படைகிறேன். நமது பங்கு மக்கள் உணர்வுப்பூர்வமாக அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பணியாற்றிய விதத்தை எண்ணி மனமகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து நாம் இணைந்து ஜெபித்து இணைந்து பணி செய்து திருத்தலத்தின் பிரஜைகள் என்பதை உலகிற்கு மெய்ப்பிப்போம்.

நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு அரசுத் தேர்வில் 100 சதவீத வெற்றியை ஈட்டியதை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியப் பெருமக்களையும் மாணவ, மாணவிகளையும் பெற்றோர்களையும் மனதார பாராட்டுகிறேன்.

நமது ஊர், கொழுந்தட்டு கிளைப்பங்கு, நமது மறைமாவட்டத்தின் 111–வது பங்காக உதயமாகியுள்ளது. அந்த பங்கு மக்கள் ஆன்மீகத்தில் மென்மேலும் வளர்ச்சி அடைய அவர்களுக்கு ஆசிவழங்கி வாழ்த்துகிறேன். ஒவ்வொரு முதற்சனி வழிபாடுகளிலும் குடும்பத்தோடு கலந்துகொண்டு வாழ்வில் வளம்பெறுவோம். நம்பிக்கையோடு அன்னையை நாடிவந்து வேண்டிய வரங்களை கேட்டுப்பெறுவோம். உங்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களும், இல்லங்களும் திருக்கல்யாணத் தாய் வழியாக இறையாசீர் பெருகி வர வாழ்த்துகிறேன். எப்பொழுதும் திருக்கல்யாணத் தாயிடம் வேண்டுதல் செய்து உங்கள் குடும்ப நலனுக்காக செபிக்கிறேன்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

# உலகத் திருச்சபை

## செய்திகள்



### புதுமைகளுக்கு திருத்தந்தை ஒப்புதல்

இத்தாலியின் கஜ்லியரில் 1812ம் ஆண்டு பிறந்த சிசிலியின் அரசி மரிய கிறிஸ்டினா, இத்தாலியின் பொசாரோவில் 1924ஆம் ஆண்டு பிறந்த மரிய பெலோக்நிசி, ஸ்பெயின் பால்மா டி மலோர்காவில் 1833ஆம் ஆண்டு பிறந்த அருள்பணி ஜியாசினோ ரொசில்லோ, போலந்தின் வெயிலுன்னில், 1885ம் ஆண்டு பிறந்த மரிய தெரசா ஆகிய நான்கு இறையடியார்களின் பரிந்துரைகளால் புதுமைகள் நடைபெற்றுள்ளன. வத்திக்கான் புனிதர் நிலைக்கு உயர்த்தும் பேராயர் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ தலைமையிலான குழு கடந்த வாரம் திருத்தந்தையைச் சந்தித்து இந்நால்வர் குறித்த விவரங்களைச் சமர்ப்பித்தது. இறையடியார் அருள்பணி. ஜியாசினோ, இயேசுமரி திரு இதயச் சபையை நிறுவியவர். இறையடியார் மரிய தெரசா, குழந்தை இயேசுவின் கார்மேல் சகோதரிகள் சபையை ஆரம்பித்தவர். ஓர் இறையடியார் அருளாளர் நிலைக்கும், புனிதர் நிலைக்கும் உயர்த்தப்படுவதற்கு அவர் பரிந்துரையால் ஒவ்வொரு நிலைக்கும் குறைந்தது ஒரு புதுமையாவது நடந்திருக்க வேண்டும்.

### தீமையை எதிர்த்துப் போராட வேண்டும்.

“இவ்வுலகின் வெறுப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மனத் தாழ்மை, சாந்தம் ஆகிய ஆயுதங்களை நாம் கொண்டிருக்க வேண்டும்” என்று கூறிய திருத்தந்தை, “இவ்வுலகம் உங்களை வெறுக்கும்போது பயப்பட வேண்டாம், ஏனெனில் அது என்னையும் வெறுத்தது’ என்று இயேசு கூறியதையும் குறிப்பிட்டு, கிறிஸ்தவர்களின் பாதை இயேசுவின் பாதை என்றும், இயேசுவை நாம் பின்பற்ற விரும்பினால், உலகின் வெறுப்பை நாம் எதிர்கொள்ள வேண்டுமென்றும், உலகம் அதற்குரிய அன்பு செய்யும்” என்றும் கூறினார். “சாத்தான் நாம் மீட்படைவதை வெறுக்கிறான். இதனாலேயே திருச்சபை தொடக்கம் முதல் இன்று வரை வெறுப்பையும், அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு வருகின்றது. முந்தையக் காலங்களைவிட இந்த நாளில், இந்த நேரத்தில் துன்பறுத்தப்படும் கிறிஸ்தவச் சமூகங்கள் பல உள்ளன” என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ், “இன்று மனிதர் மத்தியில் உரையாடல் தேவைப்படுகின்றது, இது அமைதிக்கு அவசியமானது” என்றும் கூறினார்.

திருச்சபையில் சிறப்பிக்கப்பட்டு வரும் விசுவாச ஆண்டின் ஒரு நிகழ்வாக ஏறக்குறைய 70 ஆயிரம் இளையோர் முதன் முறையாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை ஏப்ரல் 27,28 ஆகிய நாட்களில் சந்தித்தனர். வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏற்கனவே உறுதிபூசுதல் திருவருட்சாதனத்தைப் பெற்றவர்கள், மற்றும் பெறாதவர்கள் என ஏறக்குறைய 70 ஆயிரம் இளையோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளை திருச்சபையின் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியை ஊக்குவிக்கும் ஆணையம் ஏற்பாடு செய்திருந்தது.

–நன்றி : நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



01.05.2013 அன்று காலை அடைக்கலாபுரம் புனித சூசையப்பர் அறநிலையத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு தூத்துக்குடி துறைமுகப் பங்கைச் சார்ந்த முயல் தீவில் கிறிஸ்து அரசர் விழாவில் ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

06.05.2013 அன்று காலை தூத்துக்குடி மறைமாவட்ட அருட்சகோதரர்கள் சந்திப்பு மேதகு. ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சார்ந்த வெங்கடாச்சலபுரம் குருத்துவ பட்டமளிப்பு விழா ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

08.05.2013 அன்று மாலை வடக்கன்குளம் பாத்திமா கிரி ஆஸ்ரமத்தில் குருத்துவ பட்டமளிப்பு விழா மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

10.05.2013 அன்று காலை சொக்கன்குடியிருப்பு மணல் மாதா ஆலயத்தில் திருவிழா கொடியேற்றி சிறப்புத் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

12.05.2013 அன்று மாலை **பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா ஆலயத்தை திருத்தலமாக அறிவிக்கும் சிறப்புத் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில்** நடைபெற்றது.

13.05.2013 வள்ளியூரில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திடப்படுத்துதல் திருப்பலி நடைபெற்றது.

17.05.2013 அன்று மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் ஆனைக்குளம் பங்கில் திடப்படுத்துதல் திருப்பலி நடைபெற்றது.

19.05.2013 அன்று மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மணல் மாதா ஆலயத்தில் திருவிழா திருப்பலி நடைபெற்றது.

24.05.2013 அன்று மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் உடன்குடியில் ஆலய அர்ச்சிப்பு திருப்பலி நடைபெற்றது.

25.05.2013 அன்று காலை வடக்கன்குளத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

30.05.2013 அன்று மாலை பொத்தக்காலன்விளை பங்கிலிருந்து கொழுந்தட்டு மற்றும் வாலத்தூர் கிளைப்பங்குகள் பிரிக்கப்பட்டு கொழுந்தட்டு மறைமாவட்டத்தின் 111வது பங்காக மேதகு ஆயர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

நன்றி– **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்



01.05.13 அன்று முதல் மே மாதம் மாதா வணக்க வழிபாடுகள் ஆரம்பமாகின. நமது பங்கில் வி.பி.எஸ் வகுப்புகள் ஆரம்பமாகின. நமது ஊர் பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள்.

10.05.2013 அன்று வி.பி.எஸ் நிறைவு விழா மாலையில் நடைபெற்றது. மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

12.05.2013 அன்று மாலை நமது திருக்கல்யாணத்தாய் ஆலயமானது மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் அவர்களால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. பொற்பை நகர் மக்கள் மட்டுமல்லாது பல ஊர்களிலிருந்தும் அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு திருப்பலியில் பங்குபெற்று அன்னையின் ஆசீரைப் பெற்றுச்சென்றார்கள்.

21.05.2013 அன்று நமது ஊரின் கிளைப் பங்கான நவமுதலூரில் புனித மிக்கேல் அதிதூதர் கெபி புதிதாக அர்ச்சிக்கப்பட்டது. அன்று மாலை சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்குப் பிறகு ஊர்ப் பொது அசனம் நடைபெற்றது.

30.05.2013 அன்று நமது ஊரின் மற்றொரு கிளைப் பங்கான கொழுந்தட்டு, புனித சவேரியார் ஆலயம் நமது மறைமாவட்டத்தின் 111 வது பங்காக அறிவிக்கப்பட்டு மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் அவர்களால் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. நமது ஊர் பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முடிவில் ஊர்ப் பொது அசனம் நடைபெற்றது.

–பங்குத்தந்தை

# குருத்துவ வெள்ளி விழா 10.06.2013

திருக்கல்யாணத்தாய் ஆலயத்தை திருத்தலமாக அறிவிப்பதற்கு காரணமாக இருந்த நமது திருத்தல அதிபர் தந்தை அருள்திரு. பபியான் ஜோசப் அவர்களுடைய குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலி 10.06.2013 அன்று மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாணத் தாய் திருத்தலத்தில் வெள்ளிவிழா நாயகரால் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. எனவே பங்கு மக்கள் மற்றும் திருக்கல்யாணத் தாயின் பக்தர்கள் இதையே அழைப்பாக ஏற்று தந்தையோடு இணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்த வரும் படி அன்புடன் அழைக்கிறோம்

–ஆசிரியர் குழு



# அத்தியந்த விரக்தியாயிருக்கிற மாதாவே!

எந்த ஒரு புது முயற்சியும் பல படிநிலைகளைக் கொண்டதாகவும், எதிர்பாராத எதிர்விளைவுகளைத் தரக்கூடியதாகவும் அமையும். பலரது வாழ்வு உலகிற்குப் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்திருப்பதாக வரலாறு படம்பிடித்துக் காட்டுகிறது. நாடுகளைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட பல மாலுமிகள் இயற்கைச் சீற்றத்தால் நாசமாகிப் போன உண்மையும், புதிய கருவிகள் மற்றும் பொருட்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கிய விஞ்ஞானிகள் விதியின் வலையில் சிக்கிய கதையும், புதிய முயற்சிகள் சவால்கள் நிறைந்தது என்பதை எண்பிக்கின்றன. மரியின் வாழ்வும் ஒரு புதிய முயற்சியே! அம்முயற்சியானது, மரியா பல தியாகங்கள் புரிய வேண்டுமென்ற கட்டுப்பாட்டை விதித்தது. அதாவது, உலக வாழ்வைத் துறக்க வேண்டும்; உலகப் பற்றை விலக்க வேண்டும். அதற்காக மரியாவுக்குக் கிடைத்த பரிசுதான் இறைவனின் தாய் எனும் உயரிய நிலை. தனது உடலைப் பாதுகாத்துப் பரிசுத்தமாய் வைத்ததன் விளைவாக, மரியா உலக வாழ்வுக்கு எதிரியானார்.

## தாழ்நிலையிலும் மரியா ஒரு தங்கச் சுரங்கம்

“ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்” – லூக்கா. 1:48

மரியாவின் தாழ்ந்த நிலை என்பது அவரது உலகப் பற்றில்லாத வாழ்வு முறையைக் காட்டுகிறது. அவர் பிறந்த இடம்கூட யாரும் அறிந்திடாத நாசரேத்து என்னும் சிற்றூர் (யோவா 1:46). ஏழ்மையின் சின்னமாக மரியா வெளிப்படுகிறார். இத்தகைய தாழ்நிலையின் கோலமான மரியாவைத்தான் தனது மகன் தங்க இருக்கும் தங்கச் சுரங்கமாக இறைவன் பார்க்கின்றார். “ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே” என்னும் இயேசுவின் மலைப் பொழிவு இவ்வாறு நிறைவேறுகிறது.

யூத சமூகத்தில் ஒரு பெண்ணின் கன்னித்தன்மையானது கடவுளின் சாபமாகப் பார்க்கப்பட்டது. இதுவும் அப்பெண்ணைத் தாழ்நிலையின் பிம்பமாக எடுத்துக்காட்டியது. பழைய ஏற்பாட்டில், இப்தாவின் புதல்வி தனது கன்னிமை குறித்து மிகவும் வெட்கப்படுகிறாள், வேதனைப்படுகிறாள். (நீதி.11:37) எரேமியாவும் தனது கன்னித் தன்மையைக் காத்துக்கொள்ளும்படி இறைவன் அவருக்குக் கட்டளையிடுகிறார் (எரே. 16:1-9). ஆனால் எவரொருவர் தனது கன்னித் தன்மையோடு காலத்தைக் கழிக்கின்றாரோ, அவர் இஸ்ரேயல் குலத்தோரில் மிகவும் தாழ்ந்தவராவார். இவ்வாறு கன்னிமையோடு ஒருவர் வாழ்வதென்பது, உலகப் பற்றுக்கு எதிரானது. ஆனால் இறைப்பற்றுக்குச் சார்பானது. இத்தகைய கன்னிமையோடு வாழ்ந்த மரியா உலகப் பற்றை உதறித்தள்ளிவிட்டு, இறைப்பற்றை உடைமையாக்கிய உன்னத தேவதையானார்.

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**

# திருக்கல்யாண மாதா திருத்தல அறிவிப்பு ஆணை

## பொத்தக்காலன்விளை,
## தூத்துக்குடி மறைமாவட்டம்



ஆண்டவர் சீயோனிலிருந்து உனக்கு ஆசி வழங்குவாராக!
உன் வாழ்நாளெல்லாம் நீர் எருசலேமின் நல்வாழ்வை காணும்படி செய்வாராக. (திருப்பாடல் 128:5)
என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும். மத். 21:13)

“திருத்தலம்” என்ற சொல் தனிப்பட்ட பக்தி நெறி காரணமாக தலத் திரு அவை ஆயரின் ஒப்புதலுடன் இறைமக்கள் திரளான எண்ணிக்கையில் திருப்பயணங்களை மேற்கொள்கின்ற ஒரு கோயில் அல்லது “திருஇல்லம்” என்று பொருள்படும் (திருச்சபையின் சட்டம். 1230)



ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதம் 23ம் நாள் பிரான்ஸ் நாட்டில் இறைமக்கள் மரியாளின் திருமணம் உறுதி செய்யப்பட்ட நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடினர். இந்த பக்தி முயற்சிக்கு திருத்தந்தை மூன்றாம் சின்னப்பர் 1546-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தார். பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவில் உள்ள கேரளப் பகுதிக்கு வந்த நற்செய்தி அறிவிப்பாளர்கள் மரியாளின் திருமணம் உறுதி செய்யப்பட்ட நாளை அப்பகுதியிலும் கொண்டாடினார்கள். கேரளா பகுதியிலிருந்து பொத்தக்காலன்விளை பகுதிக்கு வந்து குடியேறிய கத்தோலிக்கர்கள், மரியாளின் திருமணம் உறுதிசெய்யப்பட்ட விழாவை நினைவு கூர்ந்து 1623ம் ஆண்டு கட்டிய எளிய குடிசைக் கோயில், 1835-ல் ஓட்டுக் கட்டடமாக மாறியது. 1924-ம் ஆண்டு ஆயர் திபூர்சியூஸ் ரோச் அவர்களால் புதிய கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1971-ல் தாமஸ் ஆண்டகை அவர்களால் மந்திரித்து திறக்கப்பட்டது. ஏற்கனவே 1935-ல் பொத்தக்காலன்விளை தனிப்பங்காக உயர்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மரியாளின் திருமணம் உறுதி செய்யப்பட்ட நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு இத்திருக்கோயில்

அமையப்பட்டுள்ளதால், திருமண வரம் வேண்டியும், குழந்தை வரம் வேண்டியும் ஏராளமான மக்கள் இத்திருக்கோயிலை தேடி வருகிறார்கள். ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்பாக பொத்தக்காலன்விளையில் முதல்சனி வழிபாடுகள் தொடங்கி இருந்தாலும் கடந்த 4 ஆண்டுகளில் ஏராளமான மக்கள் கோயிலுக்கு வருகிறார்கள் என சான்றுரைக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக பொத்தக்காலன்விளையில் உள்ள திருக்கல்யாண மாதா கோயில் ஒரு திருத்தலத்திற்குரிய அனைத்து செயல்களையும் சிறப்பாக இறைமக்களின் மேய்ப்புப் பணிக்கு ஏற்ற திருவழிபாட்டையும், திருவருட்சாதனங்களையும் நிறைவேற்றி வந்துள்ளது. தூத்துக்குடி மறைமாவட்டத்திலிருந்து மட்டுமல்லாமல் அருகில் உள்ள மறைமாவட்டங்களிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் ஏராளமான இறைமக்கள் நம்பிக்கையோடு திருக்கல்யாண மாதாவைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன், திருக்கல்யாண அன்னை வழியாக இறைவனின் அருட்கொடைகளை நிறைவாகப் பெற்றுக் கொள்வதாக இறைமக்கள் சான்றுரைக்கிறார்கள். எனவே இந்த கோயில் திருத்தலமாக உயர்த்தப்படுவது தகுதியும் நீதியுமானது.

ஆகவே தூத்துக்குடி மறைமாவட்டம், பொத்தக்காலன் விளையில் உள்ள திருக்கல்யாண அன்னை ஆலயம் இன்றிலிருந்து திருச்சபையின் சட்டம் 1230-ன் படி ஒரு மறைமாவட்டத் திருத்தலமாக உயர்த்தப்படுகிறது. இத் திருத்தலம் திருச்சபையின் சட்டப்படியும்(1232-1234) திருச்சபையின் ஏடுகளின் படியும் (Directory on Popular Piety and Liturgy) ஒரு மறைமாவட்ட திருத்தலத்திற்குரிய அனைத்துகடமைகளையும், உரிமைகளையும் தனிச்சிறப்பு தன்மையையும் கொண்டு விளங்கும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இந்த ஆணை 2013-ம் ஆண்டு மே மாதம் 12-ம் நாள் மாலை 7 மணிக்கு பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் நடைபெற்ற திருப்பலியில் மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் அவர்களால் அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் | அருள்திரு. அமல்ராஜ் |
| தூத்துக்குடி மறைமாவட்டம் | தலைமைச் செயலாளர் |




# நன்றிகள் பலகோடிகள் 04.05.2013
# முதல்சனி உணவு
# நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| மிக்கேல்ராஜ், பொற்பை | 100.00 |
| ஜெரால்டு, மணப்பாடு | 200.00 |
| ஜெனட் சேசுமணி | 1000.00 |
| சேசு உதயகுமார், சாத்தை | 1000.00 |
| ரெஜினாள் மேரி, பொற்பை | 100.00 |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | 501.00 |
| மரிய அனிதா, கும்பகோணம் | 100.00 |
| பதுவை பிரின்ஸ் பிரபாகர் (கொழுந்தட்டு) | 501.00 |
| ராஜேந்திரன் (பொற்பை) | 110.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| அந்தோனி குரூஸ் சேகர், பொற்பை | 100.00 |
| சந்தன சூசை, பொற்பை | 100.00 |
| மரியா, மரியநாடு, கேரளா | 1000.00 |
| S.K.ராஜ், பொற்பை | 200.00 |
| யோசு, பொழியூர் | 230.00 |
| ஜெபாஸ்டின் ரெனிஷா, மதுரை | 500.00 |
| ரோஸ்வின், தூத்துக்குடி | 1000.00 |
| டிக்ஷன், மணப்பாடு | 500.00 |
| எட்வின் தனராஜ், பிரகாசபுரம் | 200.00 |
| ஜார்ஜ், கலிங்கராஜபுரம் | 500.00 |
| ஸ்டாலின் மேரி, களக்காடு | 500.00 |
| புஷ்ப ராணி, குருசடி | 1000.00 |
| அருளப்பன், கலிங்கராஜபுரம் | 200.00 |
| விசுவாசம், கோவில்பட்டி | 500.00 |
| ஜாய்சன், பாளை | 1000.00 |
| சகாயம் கௌசல்யா, கொல்லம் | 200.00 |
| அந்தோணி ராஜ், பொற்பை | 500.00 |
| வில்சன் ஜெபமணி, பாளை | 1000.00 |
| A.பிரிட்டோ, கள்ளிகுளம் | 3400.00 |
| அந்தோனி வியாகப்பன், துரைகுடியிருப்பு | 501.00 |
| திவ்யா வினோத், பொற்பை | 2000.00 |
| ஜெபஸ்டின் லூசியாள், ராஜாக்கமங்கலம் | 1000.00 |
| மணவை பக்தர்கள், மணப்பாடு | 620.00 |
| வின்சென்ட் ராஜ், வேப்பங்காடு | 500.00 |
| ஆல்பர்ட் நியூட்டன், இராஜாக்கமங்கலதுரை | 1000.00 |

| | |
|---|---|
| முருகேசன், நரையன்குடியிருப்பு | 1000.00 |
| ஜெய்வின்சன், சென்னை | 3700.00 |
| ஜோய், கேரளா (துபாய்) | 1000.00 |
| டயானா, வடவை | 5000.00 |
| ஜாண்போஸ்கோ பொற்கொடி, இராமன்புதூர் | 200.00 |
| அருள் பிரதீப், காமநாயக்கன்பட்டி | 500.00 |
| ஆல்பர்ட் ஜூலியன், ஆரல்வாய்மொழி | 200.00 |
| மேரி அமலராணி, கண்டன்விளை | 100.00 |
| ஆண்டனி சலோம், பவன், கேரளா | 200.00 |
| ஜோஸ் பிரிட்டோ, கண்டன்விளை | 100.00 |
| தனபாலன் ஸ்டார்வின், ஆலந்தலை | 500.00 |
| மொத்தம் | 35363.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| குறிப்பிட்ட நபர் | அரிசி 1 மூடை |
| ஜெரோம் குயிண்டின், கவரப்பேட்டை | அரிசி 1 மூடை |
| குறிப்பிட்ட நபர் | அரிசி 3 மூடை |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| M.S.R. ஜஸ்டின், சென்னை | அரிசி 1 மூடை |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சுனில், பாரசாலை | அரிசி 35 கிலோ |
| கில்டா, முட்டம் | தேங்காய் 10 |
| ரவிஸ்டர், பொற்பை | உருளை 1 மூடை, வெங்காயம் 1 மூடை, சி.வெங்காயம்1 மூடை, கேரட், 1 மூடை, ப.மிளகாய் 10 கி. |
| ஜெயச்சந்திரன், சென்னை | சேனை 60 கி. ம.பூசணி 20 கி. |
| டைட்டஸ், பொற்பை | வெங்காயம் 1 மூடை |
| துரை, சென்னை | மாங்காய் 10 கி |
| லாரன்ஸ், பொற்பை | தக்காளி 10 பெட்டி |
| மரிய கொரற்றி, கீழமணக்குடி | அரிசி 25 கி |
| தாசன், உவரி | அரிசி 50 கி. |
| பத்மா, உவரி | அரிசி .50 கி. தேங்காய் 20 கி. |
| மணவை பக்தர்கள் | அரிசி 25 கி. தண்ணீர் மூடை 9 |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (04.05.2013)

| | |
|---|---|
| யோவான் சமையல் | 13000.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் அரிசி ஏழரை மூடை | 27000.00 |
| ஜோசப் மளிகை | 65618.00 |
| ஜஸ்டின் தண்ணீர்மூடை 120 | 6240.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 2700.00 |
| இம்மான் வண்டி வாடகை | 1400.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை | 2000.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | 700.00 |
| பேச்சியம்மாள் தூய்மைப்பணி | 2500.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 1124.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| மொத்தம் | 122682.00 |

| | | |
|---|---|---|
| முன் இருப்பு வங்கியில் | - | 13466.00 |
| நன்கொடை வரவு | - | 35363.00 |
| முதல் சனி மீதி பொருள் ஏல வரவு | | 13335.00 |
| பங்குத் தந்தைமூலம் வரவு | - | 74000.00 |
| கையில் | | 198.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | - | 3000.00 |
| மொத்தம் | - | 139362.00 |
| செலவு | - | 122682.00 |
| மொத்த இருப்பு | - | 16680.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | - | 16466.00 |
| கையில் | - | 214.00 |
| இறுதி மொத்த இருப்பு | - | 16680.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.03.13 அன்று இருப்பு | 312169.00 |
| 01.04.13 முதல் 28.04.13 வரை விற்பனை | 99029.00 |
| மொத்தம் | 411198.00 |
| 01.02.13 முதல் 28.02.13 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) முதற்சனி உணவு வகைக்கு கொடுத்தது ரூ.101000.00 | 144071.00 |
| மொத்தம் | 267127.00 |
| வங்கி வட்டி வரவு | 4055.00 |
| 30.04.13 அன்று இருப்பு | 271182.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# மரியாவின் செப வாழ்வு உலகப்பற்றுக்கு எதிரான
# ஓர் ஆயுதம்

மரியாவின் வாழ்வு முழுவதுமே செப வாழ்வாக இருந்ததால் இறைவழியை விட்டுச் சிறிதும் பிறழாமல் நடக்க நேர்ந்தது. எங்கு இறைப்பற்று இருக்கிறதோ அங்கே உலகப் பற்றில்லை. இத்தகைய இறைப்பற்று மரியாவை எந்நேரமும் செபிக்கத் தூண்டுகிறது. எலிசபெத்தைச் சந்தித்த பின்னரும் மரியா இறைவனது ஆற்றலையும், அதியசத்தையும் வியந்து பாடிப் போற்றுகிறார். (லூக்கா. 1:46-55). இறைப்பற்றினால் ஏற்படும் சிறப்புகளையும் எடுத்துரைக்கிறது. குறிப்பாக அவரது செபவாழ்வு எவ்வாறு மேன்மையான நிலைக்கு அவரை உயர்த்தியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு இன்னும் அவரது இறைப்பற்று அவரில் ஆழமாகிறது. எனவே தான் இவ்வுலக அரசுக்கு எதிராக இறையரசைக் கட்டும் பணியில் தீவிரமாகிறார். ஓடி ஒளிந்த சீடர்களை ஒன்று திரட்டிச் செபிக்கிறார். (தி.ப. 1:13-14). தூய ஆவியின் துணையோடு (தி.ப. 2:1-4) திருச்சபையின் வளர்ச்சிக்கு உரமளிக்கிறார். இவ்வாறு, உலகப் பற்றை உதறித் தள்ளி, இறைப்பற்றில் வேரூன்றிய மரியா உலகத்திற்கே தாயாகும் பாக்கியம் பெற்றார்.

இன்றைய நாளில், உலகப் பற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, இறை அழைப்பை ஏற்று வாழும் அடியார்களின் வழிகாட்டியாக மரியா திகழ்கிறார். பல புனிதர்களுக்கும், மறை சாட்சிகளுக்கும் இவர் ஒரு முன்மாதிரியாக விளங்கியதால் தான், அவர்களால் தங்கள் அழைப்பில் உறுதியாக நிற்க முடிந்தது. கற்பின் கலங்கரை விளக்கமாய் மரியா திகழும் போது, கரைகாணும் கப்பல்களாய் நாமும் சிறக்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**

## செய்திகள் சில வரிகளில்...

இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம் தமிழகத்தில் ஊட்டியில் அமைந்துள்ளது.

பெங்களூருவில் மத்திய சக்தி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.

ராஜ்யசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் தான் குடியரசுத் தலைவர்.

நமது பாரதத்தின் தலைநகரில் தான் அமைந்திருக்கிறது ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் காலம் அவர்கள் தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாரத ரத்னா விருது பெற்ற முதல் விஞ்ஞானி.

கவிஞர் பாரதி தாசன் அவர்களால் தான் குடும்ப விளக்கு என்ற நூல் எழுதப்பட்டது.

சுதந்திரம் பெற்ற பின் முதன் முதலில் சட்டத் துறை அமைச்சராக இருந்தவர் அண்ணல் அம்பேத்கார் அவர்கள்.

ஆகட்டும் பார்க்கலாம் என்று அடிக்கடி கூறுபவர் பெருந்தலைவர் காமராஜர்.

தங்க ஆட்டு உரோம நாடு எது என்றால் ஆஸ்திரேலியாவாகும்.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**04-05-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 2475 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 2864 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1975 பேர் |
| நற்சுகம்பெற | - | 2745 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1637 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1325 பேர் |
| வேலைகிடைக்க | - | 2620 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2310 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2765 பேர் |
| குடும்பநலன் | - | 1825 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1735 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1629 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1375 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1235 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1302 பேர் |
| மனமாற்றமடைய | - | 987 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1631 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1243 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1821 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1973 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1823 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

# இதய அஞ்சலி

| | | | |
|---|---|---|---|
| .1. | இருதயம் | பொற்பை | 13.04.13 |
| 2. | ஜோசப் | பொற்பை | 20.04.13 |
| 3. | இன்னோசென்ட் ஜெய்சிங்ராஜா | பொற்பை | 04.05.13 |
| 4. | சூசைமரியான் | பொற்பை | 11.05.13 |

# தூய மனத்தோர் கடவுளைக் காண்பர்

ஆலயம் என்பது ஆண்டவன் திருவடியில் ஆன்மா லயிப்பதற்குரிய இடமாகும். ஆ என்பது ஆணவத்தையும், லயம் என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கும். அகந்தை, ஆணவம் இவை இரண்டும் அடங்குவதற்குரிய இடம் ஆலயம் என்றும் பொருள் கொள்ளலாம். ஆலயத்திற்குள் நுழையும் முன் அகந்தையை விட்டுவிட்டு எளிய மனத்துடன் நுழைய வேண்டும். எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. என்று நற்செய்தி கூறுகிறது. (மத்தேயு 5:3). அத்துடன் அகமும் புறமும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் எனறு மத்தேயு 5:8ல் கூறப்பட்டுள்ளது.

“உம் திருமுன் நிற்க நான் தகுதியில்லாத பாவி” என்று ஆயக்காரனைப் போல தன்னைத் தாழ்த்திக் கொள்பவர் ஆசி பெறுகிறார். இதோ ஆண்டவரின் அடிமை என்று தன்னைத் தாழ்த்திக் கொண்ட மரியா இறைவனின் தாயாகும் பேறு பெறுகிறாள். விண்ணக அரசியாக உயர்த்தப்பட்டு உலக மக்களுக்கெல்லாம் அருள் வழங்குகிறாள் நம் திருக்கல்யாணத் தாய். நாமும் அன்னையிடமிருந்து எளிமை, தாழ்ச்சி என்ற பண்புகளைப் பெற்றுக்கொள்வோம்.



– **S.மேரி லீலா,** பொற்பை

# இறைவேண்டலின் 25 படிகள்

1. மூவொரு இறைவனுக்கு மாட்சி
2. இயேசுவின் திருப்பெயருக்கு புகழ்மாலை.
3. தூய ஆவியைப் போற்றுதல்
4. இறைபுகழ்ச்சி செபம்
5. இறை வாக்குறுதிகளைச் செபித்தல்
6. பாடல் பாடி செபித்தல்
7. திருப்பாடல்களினால் செபித்தல்
8. பரிந்துரை செபம் செய்தல்
9. மன்னிப்பு மன்றாட்டு வேண்டல்
10. மரபு செபம்
11. குழு செபம்
12. உடலால் செபம்
13. அமைதி செபம்
14. இறைமொழித் தியானம்
15. செபமாலை
16. உண்ணா நோன்பு
17. ஊடக நோன்பு
18. சொல் நோன்பு
19. மாற்று வாழ்வில் செபம்
20. பணியே செபம்
21. மனநிலையே செபம்
22. அர்ப்பண செபம்
23. அன்பே செபம்
24. வாழ்வே செபம்
25. மன்னிப்பே செபம்






# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

- குடும்பத்தில் இறைவன் செய்த அனைத்திற்கும் நன்றி.
  –**ஜெயசீலன்,** கண்டன்விளை.
- குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி. – சந்தோஷ், மன்னார்புரம்
- அதிக மதிப்பெண் கிடைத்ததற்கு நன்றி. – சந்தியா, பிரியங்கா, புதுக்குளம்
- திருமணம் நல்லபடியாக முடிந்தமைக்கு நன்றி. – ஜோசப், ராமன்புதூர்
- வேலை கிடைத்ததற்கு நன்றி. – ஜெபின் ஆண்டோ, கண்டன்விளை
- நினைத்த காரியம் நடந்தமைக்கு நன்றி. – புஷ்பராணி, சென்னை
- கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி .
  – கிளிட்டஸ், இரவிபுத்தன்துறை
- வெளிநாட்டில் வேலை கிடைத்தமைக்கு நன்றி. – டொனால்டு, குரும்பனை
- அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. – ஜான்சன் மகிளா, புதுக்கோட்டை
- பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் கிடைத்ததற்கு நன்றி
  – செல்வராஜ், சிந்து, பாறைசாலை
- குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி. – தாஸ், அழகப்பபுரம்.
- குருப்பட்டம் நல்ல முறையில்நடந்தமைக்கு நன்றி.
  – அருட்தந்தை பாக்கியராஜ், பொற்பை
- தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி. – ராபர்ட், ஜென்சி, கீழமணக்குடி
- இதுவரை செய்த அனைத்திற்கும் நன்றி. – இராஜேந்திரபாபு, பொற்பை
- நோயிலிருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி.
  – மார்சலின் மேரி. ஹெலன் காலனி.
- வெளிநாட்டிற்கு சென்றதற்கு நன்றி. – செல்வராஜ் சோனா, அரண்மனை.
- மகன் திருமணம் நல்லபடியாக முடிந்ததற்கு நன்றி.
  – லெவிற்றா விக்டோரியா, வீரபாண்டியன்பட்டணம்

**– பங்குத்தந்தை**

# முதல் சனி வழிபாடு (4.5.2013)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

மே மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 04.05. 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**ஜோசப்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **செல்வராஜ்** அடிகளார், அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**போஸ்கோ,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு. **ஜெகதீஸ்,** அருட்திரு.**உபர்ட்டஸ்,** அருட்திரு. **பீற்றர் ராஜா**, திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**செல்வராஜ்** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 125 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# ஏப்ரல் 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு | | |
| வங்கியில் ரூ.450865.00 | | |
| கையில் ரூ.5724.00 | 456589.00 | |
| திருப்பலி 393X70 (முதற்சனி 351 அலுவலகம் 42) | 27510.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 7990.00 | | |
| கிளை பங்குகள் - 1660.00 | 9650.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 175520.00 | |
| ஆலய வீடு வாடகை | 1000.00 | |
| முதற் சனி கடைகள் | 6260.00 | |
| மண்டபம் வாடகை | 1000.00 | |
| தொடக்கப்பள்ளிகள் மூலம் | 1281.00 | |
| உபதேசியார் மூலம் | 12744.00 | |
| பழைய வரிகள் மூலம் | 10725.00 | |
| அடக்கம் & கல்லறை | 1250.00 | |
| மொத்தம் | 703529.00 | |
| **செலவுகள் :** | | |
| முதல்சனி குருக்கள் படி | | 6450.00 |
| அன்பிய கூட்டங்கள் கேக், டீ, வடை | | 3260.00 |
| வீடு மந்திரிப்பு அருட்சகோதரர்கள் படி 5 பேர் | | 2500.00 |
| ஈஸ்டர் வாரம் கோயில் பூக்கள். | | 2400.00 |
| ஈஸ்டர் சிலுவைப் பாதை பெரிய வாரம் ஒளி அமைக்க | | 7800.00 |
| முதல் சனி விளம்பரம் – மேக்ஸ் டி.வி | | 4000.00 |
| மின் கட்டணம் | | 25692.00 |
| நியூஸ் பேப்பர் | | 272.00 |
| ஆயரை அழைக்க தூத்துக்குடி செல்ல | | 750.00 |
| எரிவாயு (2) | | 880.00 |
| தூத்துக்குடி ஆயர் சந்திப்பு திருத்தலம் சம்பந்தமாக டிரக்கர் வாடகை, உணவு வகையில் | | 1770.00 |
| அருட்தந்தைஅகிலன் படி | | 1800.00 |
| பங்களா இன்வெர்ட்டர் & பேட்டரி | | 24700.00 |


| | |
|---|---|
| பழைய உபதேசியார் அடக்க திருப்பலி | |
| ஆயர்+குருக்கள் டிபன், பேன், வண்டி வாடகை | 5470.00 |
| விளம்பர சி.டி தயாரிக்க ராஜேஷ் வீடியோ | 5000.00 |
| பள்ளி தண்ணீர் தொட்டி ஜெனரேட்டர் லைன் கொண்டுசெல்ல | 3500.00 |
| கோழிகூடு அறை அமைக்க செலவுகள் | 4864.00 |
| டோபி | 300.00 |
| பள்ளி கழிவுநீர் தொட்டி மூடி அமைத்து பூச கூலி | 400.00 |
| பெரிய வெள்ளி பசி பிணி காணிக்கை | 19170.00 |
| வி.பி.எஸ் புத்தகம் & ஆசிரியர் பயிற்சி வண்டி வாடகை | 1050.00 |
| அன்பிய தந்தையர்கள் பயணப்படி | 1000.00 |
| ஆலய சிலுவை நியான் லைட் சரி செய்ய | 6500.00 |
| திருவிழா வரவு செலவு புத்தகம் அச்சடிக்க | 4500.00 |
| ஆயர் சால்வை + குருக்கள் | 550.00 |
| பல்லக்கு வாடகை | 900.00 |
| குப்பைத் தொட்டி பெயிண்டிங் | 2190.00 |
| ஆலயம் முன் கூடுதல் பந்தல் அமைக்க | |
| தட்டி + வண்டி வாடகை+கூலி + சாப்பாடு | 43762.00 |
| ஆலய வீடு & அசன அறை மின்கட்டணம் | 1000.00 |
| குருப்பட்ட செலவுகள் ஒலி ஒளி பாடல் புத்தகம் | 20348.00 |
| பீடப்பூக்கள் சிற்றுண்டி | 300.00 |
| திருவிழா மணல் அடித்ததில் விடுபட்ட வாடகை 7 நடை டிராக்டர் | 4900.00 |
| கருப்பட்டி | 412.00 |
| மூன்று தொடக்கப்பள்ளிகளின் பதிவேடு வாங்கியது | 3773.00 |
| தேவ அழைத்தல் ஞாயிறு காணிக்கை மறைமாவட்டத்திற்கு செலுத்தியது | 2015.00 |
| மளிகை பொருட்கள் | 3804.00 |
| ரேசன் பொருட்கள் | 368.00 |
| மீன் & மட்டன் | 1395.00 |
| தண்ணீர் + பால் (850+750) | 1600.00 |
| உதவித் தொகைகள் | 2700.00 |
| மருந்துகள் | 1059.00 |
| கூர்க்கா | 200.00 |
| பதிலி தந்தையர்கள் | 1800.00 |
| அருட்சகோதரர் பயணப்படி | 1050.00 |

| | |
|---|---|
| பெட்ரோல் டீசல் ஜெனரேட்டர் வாகனம் | 6750.00 |
| செக் போஸ்ட் | 65.00 |
| தொலைபேசி, செல்போன் கட்டணம் | 1183.00 |
| ஜெராக்ஸ் & ஸ்டேசனரி | 244.00 |
| பழங்கள் | 1970.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| இரவுக் காவலர் ஊதியம் | 2500.00 |
| 2 துப்புரவுப் பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலிப்படி | 1500.00 |
| பயணிகள் அறைகளை சுத்தம் செய்ய | 500.00 |
| அருட்தந்தை கிறிஸ்டி ஈஸ்டர் பணிகள் | 4000.00 |
| பந்தல் அலுவலகம் (தட்டி + கூலி + உணவு) | 1500.00 |
| தவக்கால தியானம் குருக்கள் | 1000.00 |
| ஜேசுதாஸ் எலக்ட்ரிக் பொருட்கள் + கூலி | 36733.00 |
| அஞ்சல் கட்டணம் | 25.00 |
| திருக்கல்யாணத் தாய் திருத் தலம் நியான்விளக்கு அமைக்க முன்பணம் | 20000.00 |
| பந்தல் துணி கட்ட முன்பணம் | 5000.00 |
| புனித வரி<br>திருப்பலி 393 5 = 1965.00<br>அடக்கம் 2 7 = 14.00<br>திருப்பலி 363 50 = 18150.00 | 20129.00 |
| **மொத்த செலவுகள்** | **354253.00** |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.703529.00 |
| மொத்த செலவு | ரூ. 354253.00 |
| இறுதியிருப்பு | ரூ. 349276.00 |
| வங்கியில் | ரூ. 340685.00 |
| கையில் | ரூ. 8591.00 |
| மொத்தம் | ரூ. 349276.00 |

**– பங்குத்தந்தை**

# திருமண வாழ்த்து





## S.அருள்ராஜ்
## A.உபகாரமேரி

மணநாள் : **24.05.1999**

# பிறந்தநாள் வாழ்த்து



## A.ஆண்டோ சரோஜினி

பிறந்த நாள் : **30.05.2000**

சகோதரி

## A.அருள் தெரஸ் ஷாலினி

மாமண்டூர், செங்கல்பட்டு.

# வெற்றி! வெற்றி!!

## புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி

### பொத்தக்காலன்விளை




## 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் – 2013

தேர்வு எழுதியவர்கள் – 57

தேர்ச்சி பெற்றவர்கள் – 56

**தேர்ச்சி சதவீதம் 99%**

முதல் மதிப்பெண் : A. ஸ்டெபி டாலியா – 455

: X. சகாய ஷன்மதி – 455

2ம் மதிப்பெண் : A. ஜெரின் மேரி – 446

## 12–ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் – 2013

தேர்வு எழுதியவர்கள் – 56

தேர்ச்சி பெற்றவர்கள் – 56

**தேர்ச்சி சதவீதம் 100%**

முதல் மதிப்பெண் : A. ஜெயக்கொடி – 1094

2ம் மதிப்பெண் : X. சகாயடோனி ரூபன் – 1073

200க்கு 200 மதிப்பெண் பெற்றவர்கள்

X. சகாயடோனி ரூபன் – கணிதம் 200/200

A. ஜெயக்கொடி – கணக்குபதிவியல் 200/200

# புனித பொனிபாஸ்

## (675 - 755)



இங்கிலாந்தில் பிறந்த இவரது ஞானஸ்நானப் பெயர் வினிபிரட். இவர் பதின்மூன்று வயதிலிருந்து ஆசீர்வாதப்பர் மடத்தில் கல்வி பயின்றார். பின்னர் அந்த சபையிலே சேர்ந்தார். மடாதிபதியின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து கல்வி கற்பிக்கத் தொடங்கினார். குருப்பட்டம் பெற்றபின் ப்ரீஸ்லாந்து என்னும் நாட்டில் வேதம் போதிக்கச் சென்ற தொடக்கத்தில் இவரது முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை. உரோமைக்குச் சென்று, விக்கிரக ஆராதனை செய்கிறவர்களுக்கு வேதம் போதிக்கத் தம்மை அனுப்பும்படி பாப்புவை இவர் மன்றாடினார். ஜெர்மனி நாட்டில் அவிசுவாசிகளுக்கு வேதம் போதிக்க பாப்பு இவருக்கு முழு அதிகாரம் கொடுத்தார். இவர் ஆயர் ஆன பின் பவேரியா நாட்டில் திருச்சபையை நிறுவி ஆயர் பலரை நியமித்தார். பின் வேதம் போதிக்கும்படி ப்ரீஸ்லாந்து நாட்டிற்குச் சென்ற இவரையும் இவரோடு சேர்ந்த சன்னியாசிகளையும் வேத விரோதிகள் கொன்றார்கள்.

**சிந்தனை :** அவிசுவாசிகளுக்கு வேதத்தைப் போதிக்க இவர் போல் நம்மால் இயலாது. எனினும் நம் வாழ்வால் போதிக்கலாம். மெய்யங் கடவுளை அறியாத அனைவருக்காகவும் செபிப்போம். ஒறுத்தல் செய்வோம்.

**செபம் :** ஆண்டவரே, ஆன்ம தாகம் நிறைந்த அநேகரை திருச்சபைக்குத் தாரும்.

**– தூயவர்களின் வரலாறு**

# கவிதைச் சோலை

## சரணாலயம்

வண்ணப் பூக்கள் செல்லும்
சரணாலயம்
ஏற்ற தாழ்வின்றி பயிலும்
தேவாலயம்
ஆசானும், ஆசிரியனும்
அமர்ந்திருக்கும் கிருபாசனம்
தடையின்றி, தாழ்ச்சியின்றி
இருக்கும் ஒழுக்கக் கூடம்
எவருக்கும் நின்று கொடுக்கும்
(அறிவு) பேராலயம்
சிறு அறிஞர்கள் அமர்ந்திருக்கும்
ஆய்வுக் கூடம்
இதில் அமராதவர் எவரும்
வாழ்வில் அமர்வதில்லை....?

– **அனுஷா,** பொட்டல்குளம்

## பள்ளியெனும் பூந்தோட்டம்

பள்ளி ஒரு பூந்தோட்டம் – இது
பாலர்களின் பசுமை பூந்தோட்டம் – இங்கே
வண்ண வண்ணமலர்கள்கூட்டம்
வாசனை தரும் இயற்கை மலர்கள்
மலர்களில் தான் பல வண்ணம்
மனங்களில் தான் ஒரே எண்ணம்
எண்ணத்தில் இல்லை சாதி மத பேதம்
ஏற்றத்தாழ்வுமில்லை என்பதே இங்கே வேதம்
வேதம் போதிக்கும் பகலவனே ஆசிரியர்
வேற்றுமை பாராட்டாத ஆலயமே ஆசிரியர்
ஆசிரியர் மாண்படைந்திடவே மாணவர்
அறிவில் மலர்ந்து வசந்தம் தந்திடுவாரே
மாணவர் நிறை பலன் அளித்திடவே
மாண்புடை பெற்றோரும் உதவிடுவீரே
பெற்றோர் உதவிட தொழில் வளம் பெருகிடவே
பொழிந்திடுவாரே அருளை ஈடில்லா இறைவனும்

– **M.மிக்கேல் உஷா,** பொற்பை

# நன்றி! நன்றி!! நன்றி!!!

**சாஸ்தாவி நல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தேர்தலில் அமோக வெற்றி பெறச் செய்த உறுப்பினர்களுக்கு எங்கள் நிறைந்த நன்றியை காணிக்கையாக்குகிறோம்.**



**ரா.சூசை செசன்ராஜ் (பாப்பு)**

தலைவர்

**மா.ரவிச்சந்திரன்**

துணைத் தலைவர்

**ஏ. இருதயராஜ்**

**வி. அருள்ராஜ்**

**பா. கிறிஸ்டோபர்**

**செ. ஆபிரகாம்**

**செ. இந்திராவதி**

**லி. முத்துலெட்சுமி**

**சி. திருக்கல்யாணி**


**த. ரஞ்சிதம்**

**லெ. ஜானகி**



# குட்டீஸ் கார்னர்

ஹலோ குட்டீஸ், லீவெல்லாம் முடிந்து எல்லாரும் பள்ளிக் கூடத்திற்கு போக ஆரம்பிச்சிருப்பீங்க... புது டிரஸ்... புது வகுப்பு, புது பிரண்ட்ஸ் எல்லாம் இந்த மாதத்துல தான் கிடைக்கும் ஜமாய்ங்க... அப்படியே டெய்லி நம்ம இயேசப்பாவிடமும், அவங்களோட தாய் அன்னை மரியாளிடமும் ஜெபிக்க தவறாதீங்க... ஒவ்வொரு நாளும் ஸ்கூலுக்கு போகும் போது பைபிள் வாசிச்சிட்டுத் தான் போகணும்... வி.பி.எஸ் வகுப்புல சொன்னதெல்லாம் மறக்கக்கூடாது என்ன புரிஞ்சுதா... சரி இந்த மாதம் உங்களுக்காக இரண்டு புதிர் விளையாட்டுக்கள்... ஓகே! ஸீ யூ... பை.. பை...



அருகில் உள்ள குட்டிப் பாப்பாவுக்கு விளையாடுவதற்கு சைக்கிள் வேண்டுமாம். ஆனால் அவள் அம்மா அதை ஒளித்து வைத்திருக்கிறார்கள். பாவமில்ல... குட்டிப்பாப்பா..!

எங்கே நீங்கள் கொஞ்சம் உதவி செய்து அந்த குட்டிப் பாப்பாவை சைக்கிள் இருக்கும் இடத்திற்கு கூட்டிப் போங்களேன்.......





ஹாய் குட்டீஸ்,

இங்கே இருக்கும் இந்த இரண்டு படத்திற்குமிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். நீங்களே கண்டுபிடிக்க வேண்டும். உங்கள் திறமைக்கு ஏற்ற மதிப்பெண்களை நீங்களே போட்டுக்கொள்ளுங்கள்.

8 வித்தியாசங்களுக்கு மேல்......... 100
7 வித்தியாசங்களுக்கு மேல்......... 75
6 வித்தியாசங்களுக்கு மேல்......... 50
5 வித்தியாசங்களுக்கு கீழ்......... Fail

100

- M.எல்ரோய் ராயன், மும்பை




# முருங்கை பூவின் முக்கிய குணங்கள்

ஆயுர்வேத மருத்துவத்திலும், சித்த மருத்துவத்திலும் முருங்கையின் பயன்களைப் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது. சித்தர்கள் முருங்கையைப் பிரம்ம விருட்சம் என்றே அழைக்கின்றனர். முருங்கையின் இலை, பூ, பிஞ்சு, காய், விதை, பட்டை, வேர், என அனைத்துப் பாகங்களும் அளவற்ற மருத்துவக் குணங்களைக் கொண்டவை.

இன்றைய கணினி உலகத்தில் மனிதன் நாள்முழுவதும் அதன் முன் நேரத்தை செலவழிக்கிறான். இடைப்பட்ட நேரத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்... இதனால் கண்களுக்கு ஓய்வே கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட வர்கள் முருங்கைப் பூவுடன் பசும்பால் சேர்த்து, நன்றாகக் காய்ச்சி, காலை மாலை என இருவேளையும் அருந்தி வந்தால் கண்களில் ஈரப்பசை அதிகரித்து, கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

40வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் கண்ணாடி இல்லாமல் செய்தித்தாள் படிக்க முடியாது. இதை வெள்ளெழுத்து என்று சொல்வார்கள். இவர்கள் முருங்கைப் பூவை நிழலில் உலர்த்தி, காயவைத்து, பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் வெள்ளெழுத்து மாறும். கண்ணில் ஏற்படும் வெண்படமும் மாறும். முருங்கைப் பூவை அரைத்து, பாலில் கலந்து கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து, காலை மாலை இருவேளையும் அருந்தி வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும்.

முருங்கைப் பூவை நிழலில் உலர்த்தி, பொடி செய்து வைத்துக்கொண்டு தினமும் கஷாயம் செய்து காலை, மாலை அருந்தி வந்தால் உடலில் உள்ள பித்தம் குறைந்து, உடல் அசதி நீங்கி உடல்நிலை சீராகும். அதிக வேலைப்பளு, மனஅழுத்தம் காரணமாக சிலருக்கு நரம்புத் தளர்ச்சி உண்டாகும். இவர்கள் முருங்கைப் பூவை கஷாயம் செய்து வாரம் இருமுறை அருந்தி வந்தால் நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

பெண்களுக்கு...

சில பெண்கள் மாதவிலக்கு காலங்களில் அதிக கோபம், எரிச்சல், தலைவலி, வயிறு வலி போன்ற காரணங்காளல் அவதியுறுவார்கள். இவர்கள் முருங்கைப் பூவைக் கஷாயம் செய்து அருந்தி வந்தால் மேற்கண்ட பிரச்சனைகள் விலகும்.

– சகோ. **அ.பிரான்சிஸ்,** தூய பவுல் கல்லூரி, திருச்சி

# திரு இருதய பக்தி



திரு இருதய பக்தி, கி.பி. 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மார்க்கரீத் மரியாளுக்கு நமது ஆண்டவர் காட்சிகள் கொடுத்த பின்னர் தோன்றியாக நம்மவருள் பலர் நினைக்கலாம். திருஇருதயப் பக்தியின் இக்காலவடிவம் மார்க்கரீத் மரியாள் காலத்திலும் அதற்குப் பின்னரும் அமைந்திருக்கலாம். ஆனால் உண்மையில் திரு இருதயப்பக்தி திருச்சபை தோன்றிய காலத்திலேயே வளர்ந்தது என்று கூற வேண்டும்.

படைவீரன் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியால் குத்தினான்... இதைப் பார்த்தவனே இதற்கு சாட்சியும் கூறியுள்ளான். தான் கூறியுள்ளது உண்மை என்பது அவனுக்குத் தெரியும் (அரு. 19:34,35) என்று நமது ஆண்டவரின் அன்புச் சீடர் தெரிவிக்கிறார். இவ்விலாக்காயமே இயேசுவின் திரு இருதயப் பக்தியின் தொடக்கம் எனலாம். இயேசுவின் திரு இருதயஅன்பை இவ்விலாக்காயம் உணர்த்திற்று.

ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள், சிஸ்ற்றர்சியத் துறவிகள் இவர்களிடம் திருஇருதயப் பக்தி வளர்ந்து வந்தது. விலாவின் விழுப்புண், இருதயத்தின் புண் என்ற கருத்தையும், இரண்டுக்கும் (விலாவின் விழுப்புண்ணுக்கும் இருயத்துக்கும்) உள்ள தொடர்பையும் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள் (கிறிஸ்தவ இந்திய ஞான வாழ்வு - பக்கம். 154) சிலுவைப் போர்களுக்கு முன்னும்பின்னும் மேனாட்டுக் கிறிஸ்தவர்கள் எருசலேமுக்குத் திருப்பயணமாகச் சென்று அங்கு ஆண்டவருடைய பாடுகளைப் பதினான்கு தலங்களில் அமைத்துத் தியானித்தனர். இத்தியானத்தோடு இயேசுவின் ஐந்து திருக்காயங்களையும் தியானிக்கும் வழக்கம் திருச்சபையில் உருவாயிற்று. விலாவின் காயம் இயேசுவின் திரு இருதயத்தோடு தொடர்புடையதாகவே விளங்கிற்று.

புனித பிரான்சீசு அசிசியார் ஐந்து காய வரம் பெற்ற பின் இயேசுவின் ஐந்து திருக்காயங்களையும் தியானிக்கும் வழக்கம் திருச்சபையில் விரைந்து பரவலாயிற்று. பிரான்சிஸ்கன் சபைப் புனிதர்களும் இறையியல் வல்லுனர்களும் திரு இருதயம் பற்றிப் பல பாடல்கள் புனைந்து பாடி உருகினார்கள்.பிரான்சீசு சபையார் நம் பெருமானின் மனித இயல்பில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். ஓவியங்களிலே விலாவின் விழுப்புண்களைத் தீட்டும்பொழுது அதன் அருகே இதயத்தையும் வரைந்து வைக்கும் பழக்கம் உண்டாகியது. (கிறிஸ்தவ இந்திய ஞான வாழ்வு : பக்கம் 155)

பிரான்சிஸ்கன் சபையினர் மட்டுமல்ல, சாமிநாதர் சபையாரும் கார்த்தூசியத் துறவிகளும் திரு இருதயப் பக்தி வளரப் பெரிதும் துணை செய்திருக்கிறார்கள். திருஇருதயம் பற்றிய தங்கள் பாடல்களாலும் திருவுரைகளாலும் திருப்புகழ் மாலைகளாலும் இப்பக்தி பரவக் காரணமாயிருந்திருக்கின்றனர். கார்த்தூசியச் சபையைச் சேர்ந்த சாக்ஸனி லுடால்பு இயேசுவின் திரு இருதயம் எதற்காகப் புண்பட்டது என்று கூறுவது நமது உள்ளத்தை உருக்குவது; அந்த இதயம் நமக்காக புண்பட்டுள்ளது. அஃது அன்பின் புண், அந்த அன்புக்கு நாமும் அன்பு செய்ய வேண்டும். அன்பு வைத்து விலாவின் வாயில் வழியே சென்று இருதயத்தை அடைந்து அவரது தெய்வீக அன்போடு நமது அன்பெல்லாம் ஒரே பொருளாகுமாறு இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டும். இதற்காகவே அவரது இதயம் அன்பால் புண்பட்டுள்ளது. (கிறிஸ்தவ ஞான வாழ்வு பக்கம். 156)

16-ம், 17-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புனிதர்களும் இயேசுவின் திரு இருதயப் பக்தியை கடைப்பிடிக்கும் சான்றோராகவே காட்சியளிக்கின்றனர்.

- நன்றி. **அன்பின் அனல்**

# வாழ்த்துகிறோம்

நானிலத்தில் கிறிஸ்துவும் திருச்சபையும் போல அன்பும் அறனுமாய் என்றும் எடுத்துக்காட்டாய் இனிது வாழ வாழ்த்துகிறோம்!

| | | |
|---|---|---|
| 15.04.13 - | **செல்வகுமார் – சந்தனவின்சியா** | கொழுந்தட்டு |
| 13.05.13 - | **சகாய பிரதிஷ் – கரோலின் பாத்திமா** | கொழுந்தட்டு |
| 16.05.13 - | **ஜெரால்டுவர்கீஸ்ராஜா – விண்மதி** | பொற்பை |
| 16.05.13 - | **அந்தோணி செல்வன்– சகாய ஆஷா** | பொற்பை |
| 16.05.13 - | **சுதாகர்செல்வராஜ் – செல்வராணி** | பொற்பை |
| 16.05.13 - | **விபின் பிரசாத் – புஷ்பகலா** | கொழுந்தட்டு |
| 16.05.13 - | **சகாய லாரன்ஸ் – செல்வஷாலினி** | கொழுந்தட்டு |
| 20.05.13 - | **அந்தோனி நிஷார் – ஜெனி** | பொற்பை |
| 20.05.13 - | **வெலிங்டன் – கிறிஸ்டினா** | பொற்பை |
| 20.05.13 - | **ஜெயராஜ் – லெரின்ஸ் பாத்திமா** | கொழுந்தட்டு |
| 20.05.13 - | **ரஞ்சித் – மரிய கௌசல்யா** | கொழுந்தட்டு |
| 23.05.13 - | **தனிஷ் ராஜ் – பிலோமினாராணி** | நவமுதலூர் |
| 23.05.13 - | **அந்தோனி சேவியர் – ஜான்ஸ் மேகலா** | பொற்பை |
| 29.05.13 - | **விஜய் காமராஜ் – மரிய ஷீலா** | பொற்பை |



# வரவேற்கிறோம்



இறையாசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.

16.05.09 **ஷெர்லிற்றா தி பிரிட்டோ**
(ஜஸ்டின் தி பிரிட்டோ – டெல்பின் ரொசாரி), பொற்பை

04.09.12 **ஆரோக்கிய செல்வ ரித்திஷ்**
(அருள்செல்வன் பிரபு – ஜெனிற்றா), பொற்பை

15.06.12 **லியோன்**
(ஜேசு ராஜா – அற்புத பாக்கியம்), வாலத்தூர்.

## திருக்கல்யாண அன்னைக்கு புதிய ஆலயம்



| | | |
|---|---|---|
| ஆலயத்தின் பெயர் | : | **திருக்கல்யாணமாதா ஆலயம்** |
| ஊர் | : | மாதாபுரம்,பள்ளிபாளையம் |
| பங்கு | : | **பள்ளிபாளையம்** |
| அர்ச்சிப்பு நாள் | : | **26.05.2013** |
| அர்ச்சித்தவர் | : | **Dr.S. சிங்கராயன்** அவர்கள் (சேலம் மறைமாவட்ட ஆயர்) |
| பங்குத்தந்தை | : | **Fr. அருள் பிரான்சிஸ் சேவியர்** அவர்கள் |

–திரு.செல்வராஜ்
திருக்கல்யாணமாதா ஏஜென்ஸிஸ்,
ஈரோடு

# ஆவதும் பெண்ணாலே....?



1. விண்வெளி சென்ற முதல் இந்தியப் பெண்மணி – **கல்பனா சாவ்லா.**
2. உலக அழகி பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி – **ரீட்டா பெரைரா.**
2. ஆங்கிலக் கால்வாயை கடந்த முதல் இந்தியப் பெண்மணி – **ஆர்த்தி குப்தா.**
4. எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி – **பச்சேந்திரிபால்.**
5. நோபல் பரிசு பெற்ற முதல் (இந்திய) பெண்மணி – **அன்னை தெரஸா**
6. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண் தலைவர் – **சரோஜினி நாயுடு.**
7. முதல் பெண் வழக்கறிஞர் – **ரெஜினா குப்தா.** (1922)
8. ஞான பீட பரிசு பெற்ற முதல் இந்திய பெண்மணி – **மஹறா ஸ்வேதா தேவி.**
9. முதல் பெண் மருத்துவர் – **ஆனந்தபாய் ஜோஷி**
10. முதல் பெண் பொறியாளர் – **லலிதா** (1937)
11. முதல் பெண் துணைவேந்தர் – **ஹன்சா மேத்தா**
12. பாரத ரத்னா பெற்ற முதல் பெண்மணி – **இந்திரா காந்தி.**



நன்றி – **கையளவு களஞ்சியம்**

# 4–ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 08-06-1944 மறைந்த நாள் : 19-05-2009

## I. சிறிய புஷ்பம்

பொத்தக்காலன்விளை

**நினையாத நேரம் அணைந்த எம் குல விளக்கே!**
**உன்னை நினையாத நேரம் இல்லை.**
**காலம் உன்னைப் பிரித்தாலும்,**
**நம் இல்லத்தில் வாழும் தீபம் நீ!**
**இறைவனோடு வாழ தினமும்**
**உனக்காக ஜெபிக்கின்றோம் ! !**

அன்பு கணவர் :

Y. இருதயராஜ்,

ரூபிஸ்டோர், பொத்தக்காலன்விளை

& மகன்கள், மகள், மருமக்கள், பேரன், பேத்திகள்

மற்றும் உற்றார், உறவினர்கள்

# திருக்கல்யாணத்தாய் திருத்தல அறிவிப்பு



## திருத்தல அறிவிப்பு கல்வெட்டு திறப்பு



## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.போவாசு 5. எகிப்து 9. யோவான் 13. மத்தேயு 17. நேர்மையாளர் 21. அன்பு

**வலமிருந்து இடம் :** 2. எசேக்கியா 6.இராகேல் 10.விண்ணரசு 14. வேலையாள் 18. நிகழட்டும் 22.தானியேல்

**மேலிருந்து கீழ் :** 3.யோசேப்பு 7.அர்க்கெலா 11.செபதேயு 15. யோனா 19. சதுசேயர் 23.நிலா

**கீழிலிருந்து மேல் :** 4.இம்மானுவேல் 8.கோதுமை 12.செல்வம் 16.மானிட மகன் 20.கிறிஸ்து 24. முன்மதி

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **D.ஜோஸ்பின் மேரிதாசன்** | கவரப்பேட்டை |
| 2. | **S.சுரேஷ் கீதா** | கவரப்பேட்டை |
| 3. | **S.டோமினிக் பெனிட்டா** | கவரப்பேட்டை |
| 4. | **A.அகஸ்டின் அனுஷா** | கவரப்பேட்டை |
| 5. | **A.அன்னபுஷ்பம் ராஜன்** | கவரப்பேட்டை |
| 6. | **P. ஸ்டெல்லா பீற்றர்** | மாதர்பாக்கம் |
| 7. | **P.நிர்மலா சந்தியாகுராஜன்** | மார்க்கம்பட்டி |
| 8. | **A. மேரி ஷாலினி** | பொற்பை |
| 9. | **A. அந்தோனி ஷைனி** | பொற்பை |
| 10. | **A. மரிய மெரிலின்** | அடைக்கலாபுரம் |
| 11. | **M.லியோன்** | பொற்பை |
| 12. | **D. அந்தோனி ஏசுதாசன்** | பொற்பை |
| 13. | **M.செல்வமேரி** | பொற்பை |
| 14. | **குயின் ரோஸ் பாக்கியம்** | பொற்பை |
| 15. | **கபிரியேல் மேரி** | பொற்பை |
| 16. | **P.மேரிலீலா** | பொற்பை |
| 17. | **G.ரெஜினாள் மேரி** | பொற்பை |
| 18. | **S.பீற்றர் அமுதா** | பொற்பை |

## நன்றியும் பாராட்டுதலும்



திருத்தல ஆலயத்திற்கு புதியதாக இரண்டு காணிக்கைப் பெட்டிக
வைக்க உதவிய **P. பேரின்பம் & பிச்சையம்மாள்**
குடும்பத்தாருக்கு நன்றிகளும் பாராட்டுகளும்
ஜெபத்தோடு அர்ப்பணிக்கின்றோம்.




# முக்கிய அறிவிப்பு

திருக்கல்யாணத்தாய் மாத இதழ் சந்தாதாரர்களே! மே மாத திருக்கல்யாணத் தாய் மாத இதழ் யாருக்கும் அனுப்பிவைக்கவில்லை, ஏனென்றால் மே மாதம் 12ம் தேதி திருத்தல அறிவிப்பு விழா கொண்டாடப்பட்டது. அன்று திருக்கல்யாணத் தாய் சிறப்பு மலர் 50 பக்கத்தில் **பெரிதாக** அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. எனவே அனுப்ப முடியவில்லை. முதற்சனி வழிபாட்டிற்கு வரும்போதோ அல்லது தெரிந்த நபர் வழியாகவோ உங்கள் சந்தா எண்ணை குறிப்பிட்டுச் சொல்லி பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**– திருத்தல அதிபர் தந்தை**

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஏப்ரல் – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித ஜஸ்டின் | சீ.ஞா. 51:12-20 | மாற். 11:27-33 |
| 2. | இயேசுவின் திருஉடல் திருஇரத்தம் | தொ.நூ 14:18-20 | |
| | | 1 கொரி. 11:23-26 | லூக். 9:11-17 |
| 3. | புனித சார்லஸ் லுவாங்கா | தோபி. 1:3, 2:1a-8 | மாற். 12:1-12 |
| 4. | புனித பிரான்சிஸ் கரக்சியோலா | தோபி 2:9-14 | மாற். 12:13-17 |
| 5. | புனித பொனிபாஸ் | தோபி 3:1-11, 16-17a | மாற். 12:18-27 |
| 6. | புனித நார்பெர்ட் | தோபி 6:10-11,7:1,9-14, | |
| | | 8:4-9 | மாற். 12:28-34 |
| 7. | இயேசுவின் திரு இருதயம் | எஸ்ரா 34:11-16 | |
| | | உரோ. 5:5b-11 | லூக். 15:3-7 |
| 8. | மரியாளின் மாசற்ற இருதயம் | தோபி 12:1,5:15-20 | மாற். 12:38-44 |
| 9. | ஆண்டின் ஞாயிறு 10 | 1 அர.17:17-24 கலா. 1:11-19 | லூக் 7:11-17 |
| 10. | | 2கொரி 6:1-7 | மத். 5:1-12 |
| 11. | புனித பர்னபாஸ் | 2கொரி. 1:18-22 | மத். 5:13-16 |
| 12. | | 2கொரி. 3:4-11 | மத் 5:17-19 |
| 13. | புனித அந்தோனியார் | 2கொரி.3:15,4:1,3-6 | மத். 5:20-26 |
| 14. | புனித 1ம் மெத்தோடியஸ் | 2கொரி 4:7-15 | மத். 5:27-32 |
| 15. | புனித ஜெர்மேன் | 2கொரி. 5:14-21 | மத். 5:33-37 |
| 16. | ஆண்டின் ஞாயிறு 11 | 2 சாமு.12:7-10,13 | |
| | | கலா 2:16,19-21 | லூக். 7:36,8:3 |
| 17. | | 2 கொரி 6:1-10 | மத். 5:38-42 |
| 18. | முத்தி கிரகோரி பார்பரிகோ | 2 கொரி. 8:1-9 | மத். 5:43-48 |
| 19. | புனித ரோமுவால்து | 2 கொரி 9:6-11 | மத். 6:1-6,16-18 |
| 20. | | 2 கொரி 11:1-11 | மத். 6:7-15 |
| 21. | புனித ஞானப்பிரகாசியார் | 2 கொரி 11:18,21-30 | மத். 6:19-23 |
| 22. | புனித பவுலினுஸ் | 2 கொரி 12:1-10 | மத். 6:24-34 |
| 23. | ஆண்டின் ஞாயிறு 12 | செக்.12:10-11,13:1 | |
| | | கலா. 3:26-29 | லூக். 9:18-24 |
| 24. | புனித திருமுழுக்கு யோவான் | ஏசா.49:1-6,தி.ப 13:22-26 | லூக். 1:57-66, 80 |
| 25. | புனித வில்லியம் | தொ.நூ 13:2,5-18 | மத். 7:6,12-14 |
| 26. | | தொ. நூ 15:1-12,17-18 | மத். 7:15-20 |
| 27. | புனித அலெக்ஸாந்திரியா சிசில் | தொ.நூ. 16:1-12,15-16 | மத். 7:21-29 |
| 28. | புனித இரனேயுஸ் | தொ.நூ 17:1,9-10,15-22 | மத். 8:1-4 |
| 29. | புனித. பேதுரு, புனித பவுல் | தி.ப. 12:1-11 | |
| | | 2திமோ 4:6-8,17-18 | மத். 16:13-19 |
| 30 | ஆண்டின் ஞாயிறு 13 | 1 அர 19:16b, 19-21 | |
| | | கலா 5:1,13-18 | லூக். 9:51-62 |




# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி

மத்தேயு : அதிகாரம் 25 முதல் 28 வரை

மாற்கு : அதிகாரம் 1 முதல் 16 வரை

லூக்கா : அதிகாரம் 1 முதல் 2 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.06.2013

### இடமிருந்து வலம்

1. நள்ளிரவில் வருபவர் யார்?
5. எப்போதும் நம்மோடு இருப்பவர்கள் யார்?
9. தளர் அங்கி எந்த நிறத்தில் இருந்தது?
13. மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு....................உண்டு.
17. நீர் மெசியா என உரைத்தவர் யார்?
21. செக்கரியா எந்த வகுப்பைச் சேர்ந்தவர்..
25. உன்னதத்தில் கடவுளுக்கு...................உரித்தாகுக.

### வலமிருந்து இடம்

2. வணிகரிடம் போய் வாங்க வேண்டியது எது?
6. ஆர்வமுடையது எது?
10. இயேசுவின் உடலை அடக்கம் செய்த யோசேப்பு எந்த ஊரைச் சேர்ந்தவர்?
14. லேவியின் தகப்பன் யார்?
18. கட்டுவோர் புறக்கணித்த கல் கட்டிடத்திற்கு என்ன ஆயிற்று?.
22. நான் ஆண்டவரின் .......................
26. இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர் யார்?.

### மேலிருந்து கீழ்

7. தலைமைக் குரு எதைக் கிழித்துக்கொண்டார்?
11. சீமோன் பேதுருவின் சகோதரன் யார்?
15. நோயுற்றவருக்கு யார் தேவை?
19. ........................ ஒருவரே ஆண்டவர்
23. உம் வாழ்த்துரை என் ............ விழுந்ததும் வயிற்றினுள்ளே குழந்தை துள்ளிற்று?

### கீழிருந்து மேல்

3. தலைமைக் குரு யார்
4. தொழுநோயாளர் சீமோனின் இல்லம் எந்த ஊரில் இருந்தது?
8. 30 வெள்ளிக்காசுகளைக்கொண்டு யாருடைய நிலம் வாங்கப்பட்டது?
12. யாக்கோபு, யோவான் ஆகியோரின் தகப்பன் யார்?
16. 'திறக்கப்படு' – என்னும் பொருளுடைய சொல் எது?
20. வலுவற்றது எது?
24. திருமுழுக்கு யோவான் எந்த நிலத்தில் வாழ்ந்து வந்தான்?